36

திருக்குறள்

இரண்டாம் பாரத்துக்குரியது

36

2e

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 OCT 1948
MADRAS

(நவீன திட்டத்தின்படி)

உரை ஆசிரியர்
எம். எஸ். சுப்பிரமணியம்

விலை அணா 3

TB
031,1C5(T)
M48
173121

கம்பனியார்
பாக்கம், சென்னை 6.

உ

திருக்குறள்

——(௨)——

1. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் அரிது. [அல்லால்

உரை:—தனக்கு உவமை இல்லாதான் -(எந்த வகையிலும்) தனக்கு ஒப்பில்லாத கடவுளின், தாள் - பாதங்களை, சேர்ந்தார்க்கு - அடைந்து துதிப்பவர்களுக்கு, அல்லால் - அல்லாமல், (மற்றவர்களுக்கு), மனக் கவலை - நெஞ்சத்தில் எழும் துன்பங்களை, மாற்றல் - ஒழித்தல். அரிது - முடியாது.

உவமம் - நிகர், ஒப்பு. தாள் - பாதம்.

கருத்து:—ஈசன் பாதமே மனக் கவலைக்கு மருந்து.

உபாத்தியாயர் குறிப்பு:—பால்கடலைக் கடைகையில் ஆலகால விஷம் எழவே, தேவரும் அசுரரும் அஞ்சியோடிப் பரமசிவனை யடைய, அவர் அந்நஞ்சை யுண்டு அருளிய கதை கூறுக.

2. அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம்
புறத்த, புகழும் இல.

உரை:—அறத்தான் வருவதே இன்பம் - தர்ம மார்க்கத்தால் (அதாவது நல்வழியால்) உண்டாகும் இன்பமே இன்பமாம்; மற்ற எல்லாம் புறத்த - தீய வழிகளால் வரும் இன்பங்கள் துன்பத்தோடு கூடியனவே; புகழும் இல - மேலும் புகழையும் தாரா.

173121

அறத்தான் - நல்வழியால். புறத்த - இங்கே துன்பங்கள் என்று அர்த்தம். புகழ் - கீர்த்தி. அறம் - தர்மம்.

கருத்து:—நல்வழியே இன்பம், புகழ் இரண்டும் தரும்.

உ-கு:—முதலிலே கலிங்கத்தில் போர்புரிந்து, அதன் தீமைகளை உணர்ந்ததும், இனி போரே கூடாதென்று எங்கும் தர்மக்கொடி தூக்கிய அசோக மகாராஜன் கதை கூறவும்,

3. ஈன்ற பொழு தின்பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

உரை:—தன் மகனை - தன் பிள்ளையை, சான்றோன் - கல்வி கேள்விகளால் நிறைந்தவன், என - என்று பெரியோர் சொல்ல, கேட்ட தாய் - , ஈன்ற பொழுதின் - அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைவிட, பெரிது உவக்கும் - இன்னும் அதிக மகிழ்ச்சி அடைவாள்.

ஈன்ற - பெற்ற. உவக்கும் - மகிழும். சான்றோன் - கல்வி கேள்விகளில் சிறந்தவன். மகன் - பிள்ளை,

கருத்து:—தன் மகன் நல்ல பிள்ளை என்றால், தாய்க்குப் பேருவகை பிறக்கும்.

உ-கு;—சிவாஜியின் அறிவாற்றல்கள் கண்டு உலகம் பாராட்டிப் பேச, அது கேட்ட அன்னை ஜீஜாபாய் அடைந்த ஆனந்தத்தை உரைக்கலாம்.

4. அன்பின் வழியது உயிர்நிலை: அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

உரை:—அன்பின் வழியது - அன்பை ஆதாரமாக உடைய (உடம்பே), உயிர்நிலை - உயிரைத் தாங்கும் உடம்பாகும்; அஃது இலார்க்கு - அந்த அன்பு இல்லாத

வருக்கு, உடம்பு - உடம்பாவது, என்பு தோல் போர்த்த - எலும்பும் தோலும் மூடிய கூடாகும்: அதாவது பிணமாம்.

என்பு - எலும்பு. அஃது - அந்த. போர்த்த - மூடிய.

கருத்து:—அன்பு இல்லாதார் நடமாடும் பிணங்களே.

உ-கு:—புருவினுக்காக உயிர் கொடுக்கத் துணிந்த சிபிச் சக்கரவர்த்தியின் கதை கூறலாம்.

5. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்
புண்கணீர் பூசல் தரும்.

உரை:—அன்பிற்கும் - அன்பினுக்கும், அடைக்கும் - பிறர் அறியாமல் அடைத்துவைக்கும், தாள் - தாழ்ப்பாளும், உண்டோ - உளதோ, இல்லை; ஆர்வலர் - அன்பு உடையாரது, புன்கண் நீர் - புல்லிய கண்ணீரே, பூசல் தரும் - உள்ளே இருக்கும் அன்பை எல்லாரும் அறியக் காட்டும்.

தாள் - தாழ்ப்பாள், தாழ்க்கோல்: ஆர்வலர் - அன்புள்ளவர். புன் - அற்பமான. காட்சியால் அன்பைக் காணமுடியாது; அன்புடையவரின் செயலினால் அதனை அறியலாம். அன்புகொள்ளப்பட்டவரது துன்பம் கண்ட போதே அன்புடையவருக்குக் கண்ணில் நீர் பெருகும்.

கருத்து:—உள்ளன்பை உணர்த்துவது கண்ணீரே.

உ-கு:—இராமபாணம் பட்டதும், வாலி சுருண்டு கீழே விழ, அருகே இருந்த சுக்கிரீவன் அதுகண்டு அலறியழுதான்.

6. அகனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

உரை:—முகன் அமர்ந்து - முகம் மலர்ந்து, நல் விருந்து - நல்ல விருந்தினரை, ஓம்புவான் - உபசரிப்பவ

னது, இல் - வீட்டில், அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, செய்யாள் - இலட்சுமி, உறையும் - வசிப்பாள்.

அகன் - அகம், மனம். செய்யாள் - திருமகள். முகன் - முகம். அமர்ந்து - விரும்பி, மலர்ந்து. இல்-வீடு. நல்விருந்து - அறிவு ஒழுக்கங்களில் சிறந்த விருந்தினர். நல்விருந்தாளிகளை உபசரிப்பவனது வீட்டில் திருமகள் வாசம் செய்வாள். அதாவது செல்வம் பெருகும்.

கருத்து:—நல்விருந்து செய்வானுக்குச் செல்வம் பெருகும்.

உ-கு:—சேலம் ஜில்லாவிலே "ஐவேலி" என்னும் ஊரிலிருந்த ஆயர்குல திலகன் அசதி என்பான் விருந்தினரை உபசரித்த நேர்மை கண்டு, ஔவை மகிழ்ந்து, அவன்மீது "அசதிக்கோவை" என்னும் பிரபந்தம் பாடினுள். அவன் சீமானுக விளங்கினுன்.

7. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

உரை:—பணிவு உடையன் - வணக்கம் உடையவனுகவும், இன்சொலன் -(எல்லாரிடமும்) இனிய சொல் பேசுபவனுகவும், ஆதல் - இருத்தல், ஒருவற்கு அணி - ஒருவனுக்கு ஆபரணமாம்; பிற அல்ல - வேறு ஆபரணங்கள் ஆபரணங்கள் ஆகா.

அணி - ஆபரணம், நகை; பிற - வேறு.

கருத்து:—பணிவும் இன்சொல்லுமே ஈடில்லா ஆபரணம்.

உ-கு;—அசோகவனத்தில் சீதையிடம் திரிஜடை என்பவள் நடந்துகொண்ட விதம் நல்ல உதாரணமாம்.

8. காலத்தினுல் செய்தநன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

உரை:—காலத்தினுல் - ஒருவருக்குக் கஷ்டம் வந்த சமயத்தில், செய்த நன்றி - செய்த உபகாரம், சிறிது

எனினும் - மிகவும் சிறியது ஆனாலும், (சமயத்தை நோக்குமளவில் அது), ஞாலத்தின் - பூமியைவிட, மாண - மிகவும், பெரிது - பெரிதாம்.

காலம் - கஷ்டகாலம், நன்றி - உதவி, ஞாலம் - பூமி. மாண - மிகவும்; ஆபத்துக் காலத்தில் செய்த உதவி சிறிதானாலும் அது உலகினும் பெரிது. "பெரிது பெரிது புவனம் பெரிது" என்றாள் ஔவை. அதனினும் பெரிது காலத்தில் செய்த உதவி.

கருத்து:—ஆபத்தில் செய்யும் உதவி பூமியினும் பெரியதாம்.

உ-கு:—மிகவும் பசியுடன் வந்த ஔவைக்கு ஒருகை புளித்த மோர் கொடுத்த "புல் வேலூர் பூதன்" என்பவனது செயல் பாட்டில் ஏறிப் பரந்த புகழ்பெற்றுள்ளது.

9. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

உரை:—பிறவும் தமபோல் பேணி செயின் - பிறரது பொருளையும் தமது பொருளே போல் கருதிக் காப்பாற்றினால், வாணிகம் செய்வார்க்கு - வர்த்தகம் செய்பவருக்கு, வாணிகம் - வர்த்தகமும் ஊதியமும் பெருகும்.

வாணிகம் - வர்த்தகம். சரக்கைக் கொள்ளும்போதும் கொடுக்கும்போதும் ஆசை கொண்டு பிறர் பொருளை நாடாதிருப்பதே நல்வாணிகமாம். அவ்விதம் வர்த்தகம் புரியின் ஊதியம் பெருகும்.

கருத்து;—நடுவுநிலைமை தவறா வணிகர் நலம் பெறுவர்.

திருமயிலையில் முன்னம் பெருங் கப்பல் வணிகராய் விளங்கிய ஏலேலசிங்கம் என்பவர் கொள்வதிலும் கோடாமல் இருந்ததால் திருவள்ளுவரின் அன்புக்குப் பாத்திரமாகிப் பெருமை பெற்ற வரலாறு படிக்கவும்.

10. எல்லார்க்கும் நன்றும் பணிதல், அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

உரை:—பணிதல் - பெருமைகொள்ளாது அடங்கி நடத்தல், எல்லார்க்கும் - யாவருக்கும், நன்று ஆம் - நன்மை ஆகும்; அவர் உள்ளும் - அவ்விதம் அடங்கி நடப்பவருக்குள்ளும், செல்வர்க்கே - கல்வி, அதிகாரம், குடிப்பிறப்பு முதலிய செல்வமுடையோர்க்கே, செல்வம் தகைத்து - அது மேலும் ஒரு செல்வம்போன்ற சிறப்புடையது.

பணிதல் - அடக்கமாய் இருத்தல். தகைத்து - சிறப்பு உடையது; அடக்கமாய் இருத்தல் எல்லாருக்கும் நன்மையே தரும். கல்வி, அதிகாரம் முதலிய செல்வங்களை உடையவர்களுக்கும் இன்னும் அது ஓர் செல்வம்போல் சிறப்புத் தரும். செல்வம் என்றால் காசு பணம் மட்டுமன்று, கல்வி, குடிப்பிறப்பு, ஒழுக்கம் இவையும் செல்வங்களாம். அடக்கம் என்ற செல்வமும் சேர்ந்தால் இன்னும் சிறப்பாகும்.

கருத்து:—செல்வர்க்கும் அடக்கமே அரிய செல்வம்.

உ-கு:—கல்வி, அறிவு ஒழுக்கம் முதலிய செல்வமும், தனவான்களின் சேவையும் எய்தி நின்றும் மகாத்மா காந்தி அடக்கமே செல்வமாகக் கொண்டிருந்தார்.

11. ஒழுக்கம் உடைமை குடிமை. இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

உரை:—ஒழுக்கம் உடைமை குடிமை - ஒருவனுக்கு ஒழுக்கமே உயர் குலத்துக்கும் குணத்துக்கும் காரணமாகும்; இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அந்த ஒழுக்கத்திலிருந்து தவறுதல் இழிந்த குலமாகவும் குணமாகவும் ஆக்கிவிடும்.

குடிமை - உயர் பிறப்பு; இழிந்த - தாழ்ந்த.

ஒழுக்கம் என்றால், உலகம் ஒப்பும் நெறியினின்று தவறுதிருத்தல். நடையையும் நெறியையும் கொண்டே ஒருவனது குலத்தையும் குணத்தையும் உலகம் மதிக்கும்.

கருத்து:—ஒழுக்கமே உயர்வளிக்கும்.

உ-கு:—ஒழுக்கமும் குடிமையும் ஒருங்கே வாய்ந்து விளங்கிய பண்டித மதன மோகன மாளவியாவின் வாழ்க்கை தக்க உதாரணமாகும்.

12. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

உரை;—ஒழுக்கத்தின் - ஆசாரத்தினால், மேன்மை - பெருமையை, எய்துவர் - அடைவர்; இழுக்கத்தின் - அதிலிருந்து தவறுவதால், எய்தா - அடைவதற்கு உரியதல்லாத, பழி - பழியையே, எய்துவர் - அடைவர்.

ஒழுக்கத்தை ஆசாரம் என்பர். இழுக்கம் - தவறி நடத்தல். எய்துவர் - அடைவர். எய்தாப் பழி - படாப் பழி. ஒருவன் மீது படாப்பழி கூறப்படுமானால், அவனை ஒழுக்கம் தவறியவன் என்றும், ஆதலின் அவனுக்கு ஒவ்வும் என்றும் உலகம் கொள்ளும்.

கருத்து;—ஒழுக்கத்தால் உயர்வும் இழுக்கத்தால் பழியும் சேரும்.

உ-கு:—ஒழுக்கத்தினால் உயர்வு எய்திய சேலம் ராமசுவாமி முதலியாரின் வாழ்க்கை வரலாறு பார்க்கவும். ஒழுக்கத்தில் உயர்ந்து நின்ற ஏசுநாதரும், அவரை வருத்திய யூதரும் ஏற்ற உதாரணம் ஆவர்.

13. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

உரை:—ஒறுத்தார்க்கு - தீமைக்குத் தீமை செய்தவருக்கு (உண்டாவது), ஒருநாளை இன்பம் - ஒருநாளை இன்

பமே; பொறுத்தார்க்கு - (அத்தீமையைப்) பொறுத்தவர்க்கு, பொன்றும் துணையும் - (உலகம்) அழியுமளவும் புகழ் - கீர்த்தி (உண்டு).

ஒறுத்தல் - தண்டித்தல். பொன்றுதல் - அழிதல்.

கருத்து:—பொறுத்தார் நாடாள்வர், பொங்கினோர் காடாள்வர்.

தென்னாபிரிக்காவிலே ஒரு பட்டாணியன் தாக்கியும் அதனை மகாத்மா பொறுத்து நின்று அங்குள்ள வெள்ளையராலும் புகழ் எய்தினர்.

14. அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்
 தீயுழி உய்த்து விடும்.

உரை;—அழுக்காறு என ஒரு பாவி - பொறாமை எனப்படும் ஒப்பற்ற பாவி, திரு செற்று - இம்மையில் செல்வத்தை அழித்து, தீ உழி உய்த்து விடும் - மறுமையில் நரகத்தில் புகுத்திவிடும்.

திரு - செல்வம். செற்று - அழித்து. தீ உழி - தீய இடம் அல்லது நரகம். மிகக் கொடியரும் அடுத்தாரைக் கெடுக்க அஞ்சுவர். ஒரு வேளை கெடுப்பினும், இம்மையில் மாத்திரம் துன்பம் செய்வர். ஆனால் ஒருவனை யடுத்த அழுக்காறு என்பதோ மறுமையிலும் துன்பத்தை ஊட்டுவிக்கும். ஆதலின் "ஒரு பாவி" என்றார்.

கருத்து:—பொறாமை மறுமையிலும் கேடு தரும்.

உ-கு:—துரியோதனாதியர் பாண்டவர் மீது பொறாமை கொண்டு அரசும் இழந்தனர், உயிரும் துறந்தனர், பாபத்துக்கும் ஆளாயினர்.

15. அறனறிந்து வெஃகா அறிவுஉடையார்ச் சேரும்
 திறனறிந்து ஆங்கே திரு.

உரை:—அறன் அறிந்து - இது தர்மம் என்று தெரிந்து, வெஃகா - பிறன் பொருளை விரும்பாத, அறிவு

உடையார் - அறிவு உள்ளவரை, திரு-திருமகள், திறன் அறிந்து - வகை அறிந்து, ஆங்கே - அவ்வகையே, சேரும்-அடைவாள்.

வெஃகா - விரும்பாத. திறன் - வகை, சமயம். திரு - திருமகள். பிறரது பொருளை விரும்பாது இருத்தலே தர்மம் என்று கருதிநடக்கும் அறிவுள்ளவரைத் திருமகள் சமயம் பார்த்துச் சேருவாள்.

கருத்து:—பிறர் பொருளை விரும்பாதாரிடம் செல்வம் தானேவந்து சேரும்.

உ-கு:—அன்னை கைகேயி அரசு தேடித் தந்தும், அதனை விரும்பாத பரதனை "ஆயிரம் இராமர் நினக்கு ஈடாவரோ" என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் புகழ்ந் திருக்கின்றான்.

16. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்புஆடல் தேற்றா தவர்.

உரை:—நக சொல்லி - மகிழும்படி இனிய சொற்கள் சொல்லி, நட்பு ஆடல் - பிறரோடு நேசம் செய்வதை, தேற்றாதவர் - அறியாதவர், பக சொல்லி - தம்மைவிட்டு நீங்கும்படி புறம் சொல்லி, கேளிர் - தமது சுற்றத்தாரையும், பிரிப்பர்-பிரியப் பண்ணுவர்.

பக - பிரிய, கேளிர் - உறவினர், நக - மகிழ, நட்பு ஆடல் - நேசம் செய்தல், தேற்றாதவர் - அறியாதவர்.

கருத்து;—புறம் கூறுவோர் தமது சுற்றத்தாரையும் இழப்பர்.

உ-கு:—இராமபிரானுக்கு மகுடாபிஷேகம் என்று கேட்டதும் மனமகிழ்ந்த கைகேசியின் மனதைக் கூனி எனபாள் மாறுபடுத்த, உடனே அக் கைகேசி வனம் போகுமாறு இராமனுக்கு அறிவிக்க, அதுபற்றி உலகம் அவளைப் பழித்தது; பிள்ளை பரதனும் வெறுத்தான்

17. இலனென்று தீயவை செய்யற்க, செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

உரை:—இலன் என்று - நான் ஏழை என்று கருதி, (அது தீருமாறு ஒருவன்), தீயவை - தீவினைகளை, செய்யற்க - பிறர்க்குச் செய்யக்கூடாது. செய்யின் - (தீவினைகள்) செய்வானானால், பெயர்த்து - பின்னும், இலன் ஆகும் - ஏழை ஆவான்.

இலன் - ஏழை, தீயவை - தீவினை, செய்யற்க - செய்யாதே; பெயர்த்து - பின்னும். இங்கு மற்றும் என்பதற்கு அர்த்தமில்லை. ஏழை என்று கருதி அதனைத் தீர்க்கும் பொருட்டு ஒருவன் தீவினை செய்யின், மறுபடியும் அவன் கொடிய வறுமையே அடைவான். முயற்சியால் அல்லாமல் களவு, பொய் முதலிய தீவினைகளால் பொருள் தேடி வறுமையை நீக்க முயன்றால், அத்தீவினைக்குப் பயன் துன்பமாகவே முடியும்.

கருத்து:—வறுமை களையத் தீவினை செய்யின் வறுமையே பெருகும்.

உ-கு:—உணவுக்கு வகையில்லையே என்று திருடுவோர், தண்டனை யடைந்து, துன்பமடைவதைப் பார்க்கவும். வால்மீகியின் பூர்வ சரிதம், ஜீன்வால்ஜீன் கதை இவற்றைப் படித்தறியவும்.

18. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

உரை:—செல்வம்-செல்வமானது, நயன் உடையான் கண்-உபகாரம் செய்யும் குணமுடையவனிடம், படின் - உண்டாகுமானால். (அது), பயன்மரம்-பழம் தரும் மரம், உள்ளூர் - ஊர் நடுவே, பழுத்தது அற்று - பழுத்தல் போலாம்.

பயன் - பலன், ஊர்உள் என்பது உள்ளூர் எனமாறி நின்றது. பழுத்தது அற்று - பழுத்தற்று என நின்றது,

நயன் - நன்மை, இனிமை, உபகாரம். உபகாரியிடம் செல்வம் இருக்குமானால், பழமரம் ஊர் நடுவே பழுத்து நிற்பது போலாம்.

கருத்து;— நல்லோர் செல்வம் எல்லாருக்கும் பயன் படும்.

உ-கு:—காஞ்சி நாட்டைச் சேர்ந்த மாகறல் என்னும் ஊரிலிருந்த கோட்டி முதலியாரின் செல்வம் எல்லா ருக்கும் பயன் பட்டுவந்ததனால், அது கண்டு, உலகம் மகிழ்ந்தது. படிக்காசுப் புலவரும் 'புண்ணியகோடி பூபனே' என்று பாடினார்.

19. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

உரை;—தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கண வர் - தாம் கொண்டிருக்கும் பொருளைப் பிறர்க்கு ஈயாது சேர்த்து வைத்து அதன்பின் அதனை இழக்கும் கொடிய வர், ஈத்து உவக்கும் இன்பம் அறியார் கொல் - ஏழை களுக்குக் கொடுத்து அதனால் அவரும் தாமும் அடையும் இன்பத்தை உணர மாட்டார்களோ? (உணரார்.)

'ஈந்து' என்பது ஈத்து என வந்தது. உவக்கும் - மகி ழும். உடைமை - செல்வம். வன்கணவர் - கொடியவர். ஈகையில் கொள்வோனும், கொடுப்போனும் ஆகிய இரு வரும் மகிழ்வர். ஏழைக்கு ஈயாவிட்டால் அவன் வருந்திச் செல்வான். இதனை வலியுறுத்தவே வன்கணவர் என்றார்.

கருத்து:—ஈயாதான் செல்வம் அழிந்துபோம்.

உ-கு:—கோரைக்கால் என்னும் ஊரிலே தன் பொருளைப் பிறர்க்கு ஈயாது சேமித்து வைத்துப் பின்பு அதனை இழந்த ஆழ்வான் என்பான்மீது கசந்து, ஔவை பாடியிருப்பதை அறியவும்.

20. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

உரை:—ஈதல் - ஏழைகளுக்கு ஈதல், இசைபட-புகழ் உண்டாக, வாழ்தல்-வாழ்தலாம். அது அல்லது - அந்தப் புகழ் அல்லாமல், உயிர்க்கு - மக்கள் உயிர்க்கு, ஊதியம் - பயன், இல்லை - வேறு இல்லை.

இசை - புகழ், பட - உண்டாக, ஊதியம் - பயன்; ஈதலைச் செய்து அதனால் புகழ் அடைந்து வாழ்தலே பிறவியின் பயன்.

கருத்து;—ஈந்து புகழெய்தலே வாழ்க்கையின் பயனும்.

உ-கு:—சித்தரஞ்சன தாஸர் தமது இருநிதி, பெரிய வருவாய் இரண்டையும் எளியவர்க்குக் கொடுத்து இன்றும் கலிகாலக் கர்ணன் என்று புகழுடம்புடன் விளங்குகிறார்.

21. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றம் படின்.

உரை :—தான் அறி குற்றம் - தான் அறிந்த குற்றத்திலே, தன் நெஞ்சம் படின் - தனது மனம் பாயுமானால், (அதாவது மனமொத்துத் தப்பிதம் செய்தால்), வான் உயர் தோற்றம் - (ஒருவனுக்கு) வான்போல் உயர்ந்த தவ வேஷம், எவன் செய்யும் - என்ன பயன் தரும்?

வான் - ஆகாயம், தோற்றம் - வேடம், எவன் செய்யும் - என்ன பயன், படின் - இறங்குமானால், பாயுமானால்.

கருத்து :—மனமாரக் குற்றம் செய்யின் மகிமை யான தவவேடமும் பலன் தராது.

உ-கு : சந்நியாசிபோல் வேடம் பூண்டு வந்து, சீதாதேவியைக் கவர்ந்த தசக்கிரீவன்செயலைச் சொல்லுக.

22. உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

உரை :—உள்ளத்தால் - (குற்றங்களைத் தமது) நெஞ்சினாலே, உள்ளலும் தீதே - நினைத்தலும் பாவமாம் : (ஆதலால்), பிறன் பொருளை - பிறனது பொருளை, கள்ளத்தால் - அவனறியாத வகையினால், கள்வேம் - வஞ்சித்துக் கொள்வோம், எனல் - என்று நினையாதிரு.

உள்ளம்-மனம். உள்ளல் - நினைத்தல். கள்வேம் - கொள்வோம்.

கருத்து :—களவைக் கனவிலும் கருதேல்.

உ-கு :—முன்பு வேடனாயிருந்து, வழிபறித்து வந்து, பின்பு அதனைத் துறந்து பெருமை எய்திய வால்மீகர் கதை கூறுக.

23. எல்லா விளக்கும் விளக்குஅல்ல, சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

உரை :—சான்றோர்க்கு - அறிவு அறம் இவற்றால் பெரியவர்க்கு,எல்லா விளக்கும்-வெளி இருளைப்போக்கும் விளக்குகள் எல்லாம், விளக்கு அல்ல - விளக்கு ஆகா ; பொய்யா விளக்கே-(மனத்துள்ளே இருக்கும் அறியாமை என்னும் இருளைப் போக்கும்படியான) பொய்யாமை யாகிய விளக்கே, விளக்கு - விளக்காம்.

நெய் விளக்கு, மணி விளக்கு, கற்பூர விளக்கு என்று பல விளக்குகள் உண்டு. பொய்யா விளக்கென்றால் பொய் கூறாமையாகிய விளக்கு சூரியன், சந்திரன், நெருப்பு இவை எல்லாம் வெளியே இருக்கும் இருட்டை மாத்திரம் போக்கும். மனத்தின் உள்ளே அறியாமை என்னும் இருளை யகற்றி மகிமை தருவது வாய்மை என்னும் விளக்காம்.

கருத்து :—சான்றோர்க்கு வாய்மையே விளக்கு.

உ-கு :—நாடு நகரிழந்தும், நலிந்தும், சுடலையைக் காத்தும், பொய்பேசாதிருந்த அரிச்சந்திரன் கதையைப் பார்த்தறியலாம்.

24. மறத்தல் வெகுளியை யார்மாட்டும், தீய
பிறத்தல் அதனுன் வரும்.

உரை :—யார் மாட்டும் - யாவரிடமும், வெகுளியை - கோபத்தை, மறத்தல் - வராமல் போக்கவேண்டும். (ஏனெனில்), தீய - தீமை யெல்லாம், பிறத்தல் - உண்டாதல், அதனுல் வரும் - அக்கோபத்திலல் வரும்.

வெகுளி - கோபம். யார்மாட்டும்—எவரிடமும்.

கருத்து :—கோபம் பாபம், சண்டாளம்.

உ-கு :—வசிஷ்டர்மீது சீறிய விசுவாமித்திரர் கதை கூறி விளக்குக.

25. பிறர்க்கின்னு முற்பகல் செய்யின், தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்.

உரை :—பிறர்க்கு இன்னு - பிறர்க்குத் துன்பத்தை, முன்பகல் - ஒரு முகூர்த்தத்தின் முன்பங்கிலே, செய்யின் - செய்தால், தமக்கு - அவ்விதம் துன்பம் செய்தவற்கு, இன்னு - துன்பங்கள், பின்பகல் - அம் முகூர்த்தத்தின் பின்பங்கிலேயே, தாமே வரும் - வரும்.

இன்னு - துன்பம். இன்னு x இனிய.

கருத்து :—முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

உ-கு :—யானையென்று கருதி, ரிஷி குமாரன்மீது அம்பெய்தி, தசரதன் சாபம் பெற்ற கதை கூறுக.

26. அஞ்சாமை ஈகை அறிவூஊக்கம் இந் நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

உரை :—அஞ்சாமை - மனத்திண்மையும், ஈகை - கொடையும், அறிவு - விவேகமும், ஊக்கம் - ஊக்கமும் ஆகிய, இந்நான்கும் - இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - நடுவே நீங்காது இருத்தல், வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயற்கையாம் (சிறப்பாகும்).

அஞ்சாமை — மனத்திண்மை, நெஞ்சுரப்பு. எஞ்சாமை—குறையாதிருத்தல். அஞ்சாமையும் ஈகையும் அறிவும் ஊக்கமும் ஆகிய இந்த நான்கு குணங்களும் எப்பொழுதும் குறையாமல் இருத்தலே அரசனுக்கு இயல்பாம்.

கருத்து:—அரசனுக்கு இயல்பு வல்லமை ஈகை அறிவு ஊக்கம் இவையாம்.

உ-கு:—தஞ்சையிலே பிருகதீச்வரர் ஆலயத்தை எழுப்பிய ராஜராஜனிடம் அஞ்சாமை அறிவு முதலிய குணங்கள் இயற்கையில் இருந்தமையால், அவன் புகழ் எட்டுத் திக்குகளிலும் பரந்தது.

27. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

உரை:—கற்றோர்—படித்தவரே, கண் உடையர் - (உண்மையில்) கண்களை உடையவர், என்பவர்—என்பவராவர்; கல்லாதவர்—படியாதவர், முகத்து இரண்டு புண் உடையர்—முகத்தில் இரண்டு புண்களையே உடையவர் ஆவர் (அதாவது கண்ணிலார்).

கருத்து:—கற்றோர் முகத்தில் உள்ளது கண்; மற்றோர் முகத்தில் இருப்பது புண்.

உ-கு:—இரட்டைப் புலவர்களின் சரித்திரத்திலிருந்து இரண்டொரு சம்பவங்கள் சொல்லலாம்.

28. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

உரை:—மணல் கேணி—மணலில் தோண்டிய கிணறு, தொட்ட அனைத்து ஊறும்—தோண்டத் தோண்ட நீர் சுரக்கும்; (அதுபோல), அறிவு—அறிவானது, கற்ற அனைத்து ஊறும்—படிக்கப் படிக்கப் பெருகும்.

தொட்டனைத்து—தோண்டிய அளவு. கற்றனைத்து—கற்ற அளவு. ஊறும்—சுரக்கும். தொடு—தோண்டு. ஊரும்—நகரும்.

கருத்து :—கற்கக் கற்கப் பெருகும் அறிவு.

உ-கு :—கலைவாணி தன் கைதனில் புத்தகம் ஏந்திப் பொன்னம்பலத்தில் இருந்து இன்னும் வாசிப்பதாகப் பெரியோர் சொல்வதை விளக்கி உரைக்க. பாடம் ஏறினும் ஏடது கைவிடேல் என்பர்.

29. அரங்குஇன்றி வட்டுஆடி யற்றே, நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

உரை:—நிரம்பிய - தன் அறிவு நிரம்புவதற்கு ஏதுவான, நூலின்றி - நூல்களைப் படியாது, கோட்டி கொளல் - படித்தவரின் சபை புகுந்து ஒன்று சொல்லுதல், அரங்கு இன்றி - ஆடுவதற்கு உரிய இடம் என்பது இல்லாமல், வட்டு ஆடியற்று - சூதாடு கருவியை உருட்டுவதுபோலாம்.

அரங்கு - இடம், கட்டம், வட்டு - சூதாடு கருவி; கோட்டி - படித்தவரின் சபை. அறிவு நிரம்புவதற்கு ஏதுவாகும் நூல்களைப் படியாமல் ஒருவன் சபையில் புகுந்து ஒன்று சொல்லுதல் எப்படி இருக்கும் என்றால், கட்டான் ஒன்று அமைத்துக்கொள்ளாமல் சூதாடு கருவியை உருட்டுவது போலாகும்.

கருத்து:—அறிவில்லான் அறிவுடையோர்ச் சபையிலே அவமானம் அடைவான்.

உ-கு:—அதிமதுரக் கவிராயர் நிரம்பிய அறிவு பெருமையால் சபையிலே காளமேகப் புலவரிடம் அவமானமடைந்தார்.

30. எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

உரை:—எனைத்து ஆனும்-எவ்வளவு சிறியதாயினும், நல்லவை - நன்மை தரும் விஷயங்களை, கேட்க - கேட்க வேண்டும்; (அக்கேள்வி அறிவு), அனைத்து ஆயினும் - அந்தச் சிறிய அளவினுலும், ஆன்ற பெருமை - நிறைந்த பெருமையை, தரும் - கொடுக்கும்.

எனைத்து - எவ்வளவு, ஆன்ற - நிறைந்த, நல்லவை × தீயவை, பெருமை × சிறுமை

கருத்து:—ஒரு சிறியதாயினும் உயர் பொருளையே கேள்.

உ-கு:—ஜனமேஜயன் பாகவதம் கேட்ட கதை கூறுக.

31\. அறிவுடையார் ஆவது அறிவார், அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

உரை:—அறிவுடையார் - அறிவாளிகள், ஆவது - பின்னல் வரப்போவதை, அறிவார் - முன்னதாக அறிய வல்லவர்; அறிவு இலார் - அறிவில்லாதவர் என்போர், அஃது - பின்வரப்போகும் அதனை, அறிகல்லாதவர் - முன்னதாக அறியமாட்டாதவர்கள்.

ஆவது - பின்னல் வர இருப்பது. அறிகல்லாதவர் - அறியமாட்டாதவர். பின்னல் வரப்போவதை அறிவு உடையார் முன்னதாக அறிந்துகொள்வர். அறிவில்லார் அவ்விதம் அதனை அறியமாட்டாதவர்கள். ஆவது என்றால் தனக்கு நன்மையாகக் கூடியது என்றும் பொருள் படும்.

கருத்து:—ஆவது அறிவோனே அறிவாளி.

உ-கு:—ஜெர்மன் படைவெள்ளத்தைப் பார்த்ததும், பின் வாங்கியே தீரவேண்டும், பின்னர் வெற்றி பெறலாம் என்று ருஷியர் உணர்ந்து நடந்தனர்.

32\. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

உரை;—தன் குற்றம் - தனது குற்றத்தை, நீக்கி - முன்னே கண்டு போக்கி, பிறர் குற்றம்—பிறரது குற்றத்தை, காண்கிற்பின் - காணவல்லவனாயின், இறைக்கு - அரசனுக்கு, ஆகும் - நேரக்கூடிய, குற்றம் - குற்றமானது, என்—யாது, ஒன்றுமில்லை.

காண்கிற்பின்—காணமுடிந்தால்; இறை - அரசன்; இரை—தீனி, ஆகாரம். தனது குற்றத்தை முதலில் தெரிந்து போக்கி, அதன்பின் பிறரது குற்றத்தைக் காணவல்ல அரசனுக்கு யாதொரு குற்றமும் நேராது.

உ-கு:—தன் குற்றம் போக்கின், வேறு குற்றம் நேராது.

உ-கு:—தன்னிடம் யாதொரு குற்றமும் இல்லாது காத்துக்கொண்டதினால், நெறிதவறி நடந்த தன் மைந்தன் சாம்டாஜியையும் தவறிய தளகர்த்தரையும் சிவாஜி தண்டிக்க முடிந்தது.

33 தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

உரை:—தம்மில் பெரியார் - தம்மைவிட அறிவில் பெரியவராவோர், தமரா ஒழுகுதல் - தமது உற்றாராக இருக்கும்படி நாம் நடத்தல், வன்மையுள் எல்லாம் - எல்லா வலிமைகளினும், தலை - முதன்மையானதாம்.

தமர் - சுற்றத்தார், நண்பர். வன்மை - வலிமை. பொருள்வலி, மனவலி, மதிவலி, தேகவலி முதலிய பல வலிமைகள் இருந்தாலும், பெரியோரின் துணையே மிகச் சிறந்த வலிமை.

கருத்து:—பெரியாரைத் துணைகொள்ளுதலே பேரறிவாம்.

உ-கு:—வலிமை மிகுந்த சிவாஜி வேந்தன் இராமதாஸ் சுவாமிகளை உற்ற துணையாகக்கொண்டு நடந்ததை உய்த்துணரவும்.

34. மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி, இனத்தானும்
இன்னன் எனப்படும் சொல்.

உரை:—மாந்தர்க்கு - மனிதர்க்கு, உணர்ச்சி—பொது வான் அறிவு, மனத்தான்—தனது மனத்தினல், ஆம்—ஆகும்; இன்னன்—இவன் இப்படிப்பட்டவன், எனப்படும் சொல் - என்று உலகத்தால் சொல்லப்படுவது, இனத்தான்-அவன் பழகும் இனத்தினல், ஆம்—உண்டாகும்.

உணர்ச்சி—உணர்வு, பொது அறிவு. மாந்தர்—மனிதர், மாந்தர்க்கு இயற்கை அறிவு தம் மனத்தால் உண்டாகும். இயற்கையிலே மனிதருக்கு அறிவு என்பது உண்டு. அந்த அறிவானது அவனைச் சேர்ந்துள்ள இனத்துக்கு ஏற்ப மாறுபடும். நல்ல இனமாயின், அவன் நல்லவன் ஆவான்; தீய இனமாயின், அவன் தீயவன் ஆவான். இயல்பாகவே நல்லவன் ஆயினும் தீயோரைச் சேரின், தீயவனுகி இகழ்ச்சி அடைவான்.

கருத்து:—இனத்துக்கு ஏற்ப ஏற்றமும் இகழ்ச்சியும் நேரும்.

உ-கு:—மகாதேவ தேசாய் என்பவர் மகாத்மா காந்தியை யடுத்து மகிமை பலவும் எய்தினர்.

35. பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

உரை:—பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - மயில் பீலி ஏற்றிய வண்டியும் அச்சு முறியும், [எப்பொழுது என்ருல்], அப்பண்டம் சால மிகுத்துப்பெயின்—அப் பீலியை அதிகமாக ஏற்றிவிட்டால்.

பீலி—மயில் இறகு, பெய்தல்—ஏற்றுதல், சாகாடு வண்டி. சாக்காடு—இறப்பு. இலேசான பீலியையும் மிகுதியாக ஏற்றினல் வன்மையான அச்சு முறியும். அதுபோல,

எளியரென்று பலரோடும் பகை கொள்வான், தான் வலி யனுய் இருந்தாலும் மிகுந்த பகைவர் முன்னே அழிந்து போவான்,

கருத்து;—ஆற்றலை மிஞ்சிக் காரியம் செய்யாதே.

உ-கு:—மலையமான் திருமுடிக்காரி என்பான் தனது வலியை உணராமல் தர்மபுரியை ஆண்டுவந்த அதிக மானைப் பகைத்துப் பரிபவம் அடைந்தான்.

36. கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

உரை:—கூம்பும் பருவத்து கொக்கு ஒக்க—[காலம் நல்லதாக இல்லாவிடின்] ஒடுங்கி இருக்கவேண்டிய காலத் தில் கொக்கைப்போல் அடங்கி இருக்கவேண்டும்; சீர்த்த விடத்து அதன் குத்து ஒக்க—[காலம்] வாய்த்தபோது அக்கொக்கு (தப்பாது) மீனைக் கொத்துவதுபோலக் காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும்.

கூம்பு—ஒடுங்கும், அடங்கும். சீர்த்த—சிறப்பான. மடைத்தலையில் ஓடு மீனேட, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.

கருத்து;—காலம் கருதியிருந்து காரியத்தைச் சாதித் தலே சிறப்பாகும்.

உ-கு:—நவநந்தனரின்மீது பகைவைத்த சாணக்கி யன் தன் கருத்தை முடிக்கச் சமயம் பார்த்து நின்ற தைப் படித்தறியவும்.

37. நெடும்புனலுள் வெல்லும் முதலை, அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

உரை:—முதலை—முதலையானது, நெடும்—ஆழமான, புனலின்—நீரில் இருந்தால், வெல்லும்—எதையும் வென்றுவிடும்; புனலின்—ஜலத்திலிருந்து, நீங்கின்—

அம் முதலை நீங்கிவிட்டால், பிற—வேறு எந்தப் பிராணியும், அதனை அடும்—அதனை ஜெயித்துவிடும்.

புனல்—நீர். நெடும் புனல் - ஆழமான தடாகம் அல்லது சமுத்திரம், அடும்—கொல்லும். ஆழமான நீரில் இருந்தால், முதலை எல்லா உயிரையும் வெல்லும். அது அந் நீரை விட்டு அகன்றால் பிற உயிர்களால் தோல்வியடையும். நீரில் இருக்கும்போது தான் முதலைக்குப் பலம் அதிகம். யானையையும் அது இழுத்துக் கொன்றுவிடும். கரையில் இருந்தால் முதலைக்குப் பலம் கிடையாது, "உள்ளூரில் இராஜா, அயலூரில் பூனை" என்பது பழமொழி.

கருத்து:—இடத்துக்கு ஏற்ப வலிமை கிடைக்கும்.

உ—கு:—தடாகத்திலே தாமரை பறிக்கச் சென்ற கஜேந்திரனை முதலை பற்றி இழுக்க, ஆதிமூலமே என்று யானை அலறவே, திருமால் தோன்றி அந்த யானையைக் காத்த கதையைப் பார்க்கவும்.

38. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

உரை:—பெருமைக்கும் —(குடிப்பிறப்பு, குணம், அறிவு, இவற்றால் மனிதர் அடையும்) பெருமைக்கும், ஏனை சிறுமைக்கும்—வேறு இழிவுக்கும், கட்டளைக்கல்—உரைகல், தம் தம் கருமமே—தங்கள் தங்கள் செயல்களேயாம்.

பெருமை × சிறுமை. கட்டளைக்கல்—உரைகல், பொன்னை மாற்றுப்பார்க்கும் கல்.

கருத்து;—பெருமை சிறுமைக்கு நம் செயலே சாட்சி.

உ-கு;—அருஞ்சபதம் செய்து, அதன்படியே நடந்து, யாவரும் போற்றி நின்ற பீஷ்மர் சரிதம் கூறுக.

39. பெருங்கொடையான் பேணுன் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

உரை:—பெருங் கொடையான்—மிகுந்த கொடையுடையவனும், வெகுளி—கோபத்தை, பேணுன்—விரும்பாதவனும் ஆனுல், அவனின்—அவன்போல, மருங்கு உடையார்—சுற்றம் உடையவர், மாநிலத்து—இந்தப் பெரிய உலகத்தில், இல்—இல்லை.

வெகுளி—கோபம், மருங்கு—சுற்றம். மிக்க கொடையுடையவனும் வெகுளியை விரும்பாதவனும் உள்ள ஒருவன இருப்பின், அவன்போல் உறவினரை உடையவர் இவ்வுலகில் ஒருவரும் இல்லை. உலோபமும் கோபமும் சுற்றத்தை அழிக்கும்.

கருத்து:—கொடையும் பொறையும் கிளையைப் பெருக்கும்.

உ—கு:—ஸம்ராட் எனும் யாகம் செய்த ரதிமகா ராஜனது சரிதம் பார்க்கவும்.

40. அரியவென்று ஆகாத இல்லை,பொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

உரை:—பொச்சாவாக் கருவியால் — தளர்வில்லாத மனத்தால், போற்றி செயின்—ஆராய்ந்து முயன்ருல், அரிய என்று ஆகாத இல்லை—செய்யமுடியாத காரியம் என்று ஒன்றும் இராது.

கருத்து:முனைந்து முயன்ருல் முடியாத காரியம் ஏது?

உ-கு:—நவநந்தனரை வீழ்த்தி, கிரேக்கப் படை வெள்ளத்தையும் புரட்டியெறிந்த சந்திரகுப்தன் சரித்திரம் கூறி விளக்குக.

41. வேலன்று வென்றி தருவது, மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்.

உரை:—மன்னவன்—அரசனுக்கு, வென்றி தருவது-வெற்றி கொடுப்பது, வேல் அன்று—அவன் எறியும் வேல்

அல்ல ; கோல்—அவன் ஏந்தும் கோலே ; அதூஉம்—அக்கோலும், கோடாது எனின்—கோணமல் செம்மையாக இருக்குமானல்தான்.

வென்றி—வெற்றி. கோல்—ஆட்சிமுறை. கோடாது—கோணது. மன்னவன்—அரசன்.

கருத்து :—வேந்தனுக்குப் பலம் தருவது செங்கோலே.

உ—கு :—செங்கோல் வளத்தினல் சிறப்பெய்திய அக்பர் சக்கரவர்த்தியின் சரித்திரம் கூறுக.

42. துளியின்மை ஞாலத்திற்கு எற்று,அற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

உரை :—துளி—மழை, இன்மை—இல்லாதிருத்தல், ஞாலத்திற்கு—பூமியில் வாழும் உயிர்களுக்கு, எற்று—என்ன தன்மை உடையது, [அதாவது துன்பம் தரும் தன்மை உடையதாம்] வேந்தன்—அரசனது, அளி—கருணை, இன்மை—இல்லாதிருத்தல், வாழும்—அவன் நாட்டில் வாழ்கின்ற, உயிர்க்கு—உயிர்களுக்கு, அற்றே—, அதே தன்மை உடையதாம்.)அதாவது துன்பம் தருவதாம்.)

துளி—மழை. ஞாலம்—பூமி. எற்று—என்ன தன்மையது. அற்று—அதே தன்மையது, அளி—அன்பு, அருள். உயிர்க்கு—ஜனங்களுக்கு, மழை இன்மை இந்த உலகத்திற்கு எப்படித் துன்பம் பயக்குமோ அப்படியே அரசனது கருணையில்லாமை அவன் நாட்டில் வாழும் குடிகளுக்குத் துன்பம் பயக்கும்.

கருத்து :—மழைபோல் மன்னவன் அளியே மக்களுக்கு இன்பம் விளைக்கும்,

உ—கு :—துக்ளக் வேந்தன், ஔரங்கசீப் சக்கரவர்த்தி இவர்களிடம் அன்பும் அருளும் இல்லாமையால் மக்கள் பெரிதும் வருந்தி நின்றனர்.

173121

43. உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

உரை :—உள்ளம் உடைமை—(தளரா) ஊக்கம் கொண்டிருத்தலே, உடைமை—(நிலைபெற்ற) சொத்தாம்; பொருள் உடைமை—வேறு செல்வங்கள் கொண்டிருத்தல், நில்லாது—நிலைபெறாமல், நீங்கிவிடும்—நீங்கிப்போம்.

உள்ளம்—ஊக்கம்; உடைமை—செல்வம். பொருள்—பணம்.

கருத்து :—ஊக்கமுடைமையே உயரிய செல்வமாம்.

உ—கு :—ஊக்க முடைமையால் சிவாஜி சிறந்த அரசன் ஆகியதையும், ஹுமாயூன் இழந்த அரசை மீண்டும் பெற்றதையும் கூறுக.

44. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

உரை :—மடிமை—சோம்பலானது, குடிமைக்கண்—குடிமக்களைத் தாங்கும் அரசனிடம், தங்கின்—தங்குமானால் அது, தன்—தனது, ஒன்னார்க்கு—பகைவர்க்கு, அடிமை—அடிமையாகும் தன்மையை, புகுத்திவிடும்—உண்டாக்கிவிடும்.

மடிமை—சோம்பல், குடிமை—குடிகளைக் காத்தல். ஒன்னார்—பகைவர். சோம்பல் பொருந்திய அரசன் தனது பகைவர்க்கு அடிமையாகி வாழ நேரும். அரசனானவோன் அடிமையாகுதல் மிக்க இழிவாம்.

கருத்து :—சோம்பல் வாய்ந்த அரசன் அடிமையாகி வாழ நேரும்.

உ—கு :—கொங்கு மண்டலத்தின் ஒரு பாகத்தை முன்னம் ஆண்டுவந்த அதிகன் என்னும் அரசன் இன்பத்தில் ஆழ்ந்து சோம்பல்கொண்டு கிடந்தமையால் தனது நாட்டையும் இழந்து சோழனுககு அடிமையாகியும் வாழ நேர்ந்தது.

45. அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

உரை:—அருமை உடைத்து என்று—ஒரு செயலைச் செய்து முடித்தல் கடினம் என்று கருதி, அசாவாமை வேண்டும்—மனம் தளராமல் இருத்தல் வேண்டும்; (ஏனென்றால்) முயற்சி—இடைவிடா முயற்சியே, பெருமை தரும்—அச்செயலை முடிப்பதற்கு உரிய வலிமையைக் கொடுக்கும்.

அசாவாமை—தளராமை. அருமை—கடினம்.

கருத்து:—விடாமுயற்சியே வெற்றி தரும்.

உ—கு:—தந்தையின் மடியில் ஏறி அமர விரும்பிய போது மாற்றாந்தாய் தடுக்க, அதனை மனதில் கொண்டு விடா முயற்சியினால் சிறுவன் துருவன் பெரும் பதம் அடைந்த வரலாற்றினை விளம்பலாம்.

46. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

உரை:—இன்பம் விழையான்—தனக்குத் துன்பத்தை விரும்பாமல், வினை விழைவான்—காரியத்தை முடித்தலையே விரும்புகிறவன், தன் கேளிர்—தன் சுற்றத்தாரின், துன்பம் துடைத்து—துன்பம் போக்கி, ஊன்றும் தூண்—(குடும்பபாரம்) தாங்கும் தூண் ஆவான்.

விழைதல் — விரும்புதல்; கேளிர் — உறவினர்; இன்பம் × துன்பம்; துடை—போக்கு; வினை—காரியம்,

கருத்து:—உழைப்பாளியே உற்றார்க்கு ஏற்ற துணை.

உ—கு:—தாயினை அடிமைத்தனத்திலிருந்து மீட்ட கருடன் கதை கூறுக.

47. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

உரை:—வன்கண்—தொழில் செய்கையில் சலியாது இருத்தலும், குடிகாத்தலும்—,கற்று அறிதல்—நீதி நூல்களைப் படித்து அறிதலும், ஆள்வினை—விடா முயற்சியும், ஐந்துடன்-கருவி, காலம், செய்கை, அருவினை, மகிமை ஆகிய ஐந்தோடு, மாண்டது—நன்கு உடைய வனே, அமைச்சு—மந்திரியாவான்.

வன்கண்—சலியாமை. ஆள்வினை—விடா முயற்சி; ஐந்து என்றால் காரியம் செய்வதற்கு ஏற்ற சாதனம், காரியம் செய்வதற்கேற்ற காலம், காரியம் செய்யும் விதம், அருமையான காரியம், மகிமை ஆகிய ஐந்துமாம்.

கருத்து:—அறிவும் துணிவும் ஆண்மையும் திண்மை யும் நன்கு அமைந்தவனே அமைச்சன்.

உ-கு:—தற்சமயம் நம் தேசத்தில் முதல் மந்திரியாக விளங்கும் பண்டித நேருவின் பெருங் குணாதிசயங்களை எண்ணிப் பார்க்கவும்.

48. பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
 கழிநல் குரவே தலை.

உரை;—பழி மலைந்து எய்திய ஆக்கத்தின்—கீழோர் தீயன செய்து பழி கொண்டு பெற்ற செல்வத்தைக் காட்டிலும், சான்றோர் கழி நல்குரவே தலை—(தீயனவே செய்யாத) மேலோர் அனுபவிக்கும் மிகுந்த வறுமையே உயர்ந்தது.

மலைந்து—சுமந்து. கழி - மிகுந்த. நல்குரவு—தரித் திரம். தீயவினைகள் பழிக்கு இடமாயினும் அவற்றை அஞ்சாது செய்வோர் சிலர் செல்வம் எய்திச் சிறக்கின்ற னர்; அஞ்சி நடப்போர் வறுமையுற்று வாடுகின்றனர். என்றாலும், அச்செல்வத்தினும், இவ்வறுமையே சிறந்தது.

கருத்து:—பழிசுமந்த செல்வத்தினும், பழியஞ்சும் வறுமையே மேலாம்.

உ—கு:—தியாகையர், கவி சுப்பிரமணிய பாரதியார் இவர்கள் பழிப்புக்கிடமான செல்வத்தை மறுத்து ஏழ்மையை விரும்பி குற்றதை அறியவும்.

49. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

உரை: எண்ணிய—நினைத்ததை எல்லாம், எண்ணியாங்கு—நினைத்தபடியே, எய்துப—அடைவார், எப்பொழுது என்ருல்: எண்ணியார்—நினைத்ததை நினைத்தபடி அடையவேண்டும் என்று நினைக்கிறவர், திண்ணியர் ஆக பெறின்—நினைத்ததை அடைவதற்கான தொழிலில் தளராமல் மனவலி கொண்டிருந்தால்.

எண்ணிய — நினைத்தவை, எய்துப — அடைவர், எண்ணிய ஆங்கு — இங்கே எண்ணியாங்கு என நின்றது. திண்ணியர்—மனவலியுடன் கார்யம் செய்வோர். நினைத்ததை நினைத்தபடியே அடைய வேண்டின் மனவலியுடன் காரியஞ் செய்தல்வேண்டும்.

கருத்து:—திண்மையுடையார்க்கு நினைத்தவையெல்லாம் கைகூடும்.

உ-கு:—சிறிய ஜமீன்தாரின் மகனுய் இருந்தும் பெரிய அரசனுகவேண்டும் என்று விரும்பிய வீர சிவாஜி அவ்வாறே மனவலியும் வினைவலியும் கொண்டு பெரு வேந்தன் ஆனுன் அல்லவா!

50. சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

உரை:—சூழ்ச்சி—யோசனைக்கு, முடிவு—எல்லையாவது, துணிவு எய்தல்—துணிவு கொள்ளுதலாம்: அத்துணிவு—அவ்விதம் துணிவுகொண்ட தொழில், தாழ்ச்சியுள்—தாமதத்தில், தங்குதல் — தங்குதல், தீது—குற்றமாம்.

சூழ்ச்சி—ஆராய்தல், ஆலோசித்தல்: தாழ்ச்சி — கால தாமதம். ஒரு தொழிலைக் குறித்து ஆலோசிப்ப

தற்கு எல்லை எது என்றால் இனி அது தவறாது என்று தெளிவுகொள்ளுதலாம். தெளிவுகொண்டபின், வினை செய்வதில் காலதாமதம் செய்தல் தீமையாகும்.

கருத்து;—காரியத்தைத் தொடங்கியபின் காலதாமதம் செய்யாததே.

உ—கு:— ஸாத்வீகப் போர்புரிந்தே சுயராஜ்யம் எய்தவேண்டுமென்று துணிந்தபின் தாமதம் செய்யாமல் இயக்கத்தை நடத்தினார் மகாத்மா காந்தி.

51. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

உரை:—அடுத்தது—(தன்) அருகேயுள்ள பொருளின் நிறத்தையும் வடிவையும், காட்டும் பளிங்கு போல்—(தான் கொண்டு) காட்டுகிற கண்ணாடி போல், நெஞ்சம் - (ஒருவனது.) நெஞ்சத்தில், கடுத்தது—மிகுந்துள்ள குணத்தை, முகம் காட்டும்—அவன் முகமானது தெரிவிக்கும்.

கடுத்தது—மிகுந்தது. அடுத்தது — அருகேயுள்ளது.

கருத்து:—அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

உ—கு:—'கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா' என்ற வாசுகியம்மையின் கதையைச்சொல்லலாம்.

52. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

உரை:— தள்ளாவிளையுளும்—விளைவு மிகப் பாடுபடும் உழவரும், தக்காரும் — குணவான்களும், தாழ்விலா செல்வரும் —குறையாத செல்வமுடையவர்களும், சேர்வது—ஒருங்குசேர்ந்து வாழும் இடமே, நாடு—நல்ல நாடாகும்.

தள்ளா—குறையாத, விளையுள்—விளைவு, தக்கார்—சான்றோர்.

கருத்து:-குண நலமும், செல்வமும், விளைவும் வாய்ந்ததே நாடாம்.

உ—கு:—இராம இராஜ்யம் வேண்டுமென மகாத்மா காந்தி சொல்லியதை அறிய அந்த இராமன் காலத்தில் அரசு இருந்த நிலையைக் குறித்துக் கம்பன் கூறியிருக்கும் பாடல்களின் பொருளை விளக்கிக் காட்டலாம்.

53. நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

உரை:—நீரவர்—அறிவாளிகளின், கேண்மை—நேசச் செயல்கள், பிறை—பிறைபோல், நிறை—நாள்தோறும் நிறையும், நீர—தன்மை உடையன: பேதையார்—மூடர்களின், நட்பு—நேசங்கள், மதி—பூர்ண சந்திரன் போல, பின் நீர—பின்பு நாள்தோறும் குறையும் தன்மையன.

நீர—தன்மையன, நீரவர்—அறிவாளிகள். கேண்மை —நேசம், பிறை—பிறைச்சந்திரன், மதி—பூர்ண சந்திரன். அறிவாளிகளின் நேசம் பிறைபோல் நாள்தோறும் வளரும்; மூடர்களின் நேசமோ முழுச் சந்திரன்போல் நாள் தோறும் குறைந்து ஒழிந்துபோம்.

கருத்து:—அறிவாளிகளின் நட்பே நாள்தோறும் பெருகி வளரும்.

உ—கு: மகாத்மா காந்தியுடன் பூஜ்யர் அன்டிரூஸ் கொண்ட நட்பு வரவரப் பெருகிவந்தது.

54. மருவுக மாசற்றார் கேண்மை, ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

உரை:—மாசு அற்றார்—குற்றம் இல்லாதவரது, கேண்மை—நேசத்தை, மருவுக—பழகி அடைக; ஒப்பு இலார்—மனம் ஒத்தலில்லாதவரின், நட்பு—நேசத்தை, ஒன்று—அவருக்கு வேண்டிய ஒன்றை, ஈந்தும்—கொடுத்தும், ஒருவுக—விட்டு விடுக.

மருவுக—பழகிஅடைக. ஈந்தும் என்றது இங்கே ஈத்தும் என நின்றது. ஒருவுக—விட்டுவிடுக. குற்றமற்றார் நேசத்தை விரும்பித் தழுவு. ஒப்பில்லார்

நேசத்தை ஒரு பொருளைக் கொடுத்தாயினும் ஒழித்து விடு. "இணக்கம் அறிந்து இணங்கு என்றாள்" ஔவை.

கருத்து:—நல்லவரின் நட்பை நாடு, தீயவரின் நட்பைத் தள்ளிவிடு.

உ-கு:—சுக்கிரீவனும் விபீஷணனும் இராமபிரானது நட்பை நாடி அடைந்தனர்.

55. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

உரை:—அடுக்கிய கோடி பெறினும்—கோடிக்கணக்கான பொருள் பெற்றாலும், குடிப்பிறந்தார்—உயர்ந்த குடியில் பிறந்தவர்கள், குன்றுவ—இழிந்த செயல்களை, செய்தல் இலர்—செய்யார்.

குன்றுவ—இழிந்த செயல்கள். அடுக்கிய கோடி—பல கோடி.

கருத்து:-உயர்குடியில் வந்தார் இழிதொழில் செய்யார்,

உ-கு:—மணிமுடி மறுத்த பரதன் வரலாறு சான்று.

56. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

உரை:—மயிர் நீப்பின்—(தன் வால் மயிர்த்திரளில்) ஒரு மயிர் போயினும், வாழா—உயிர்வாழாத, கவரிமா அன்னார்—கவரி மானைப் போன்றவர், மானம் வரின்—(உயிர் நீங்குவதற்கான) அவமானம் நேர்ந்தால், உயிர் நீப்பர்—தம் உயிரை விட்டு விடுவார்.

நீப்பின்—நீங்கின், கவரிமான் — வால் நுனியில் அடர்ந்த மயிருள்ள மான். மானம்வரின்—மானம் கெடவரன்,

கருத்து:-மானம் கெடவரின் மாண்டு மடிவர்மேலோர்.

உ-கு:—முகம்மது கஜனியிடம் தோற்றுப் போன ஜெயபாலன் தீக்குளித்த வரலாறு விளம்பலாம்.

57. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்: கிழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்.

உரை:—மேல் இருந்தும்—உயர்ந்த இடத்தில் இருந்தாலும், மேல் அல்லார்—மேலான குணமில்லாதவர், மேல் அல்லர்—சிறந்த புருஷர் ஆகார்; கீழ் இருந்தும்—தாழ்ந்த இடத்தில் இருந்தாலும், கீழ் அல்லவர்—கெட்ட குணமில்லாதவர், கீழ் அல்லார்—சிறியர் ஆகார்.

கருத்து:—பெருமைக்கும் சிறுமைக்கும் குணமே காரணம், இடமன்று.

உ-கு:—வியாசரது பிறப்பினையும் பெருமையினையும் கூறுக. நதிமூலம் ரிஷிமூலம் பாராதே என்பது பழமொழி.

58. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (யோடு

உரை:—அன்பு—அன்பும், நாண் — [பழிபாவங் கண்டு] வெட்கமடைதலும், ஒப்புரவு—உபகாரம் செய்தலும், கண்ணோட்டம்—கருணை காட்டலும், வாய்மை—சத்தியம் பேசுதலும், சால்பு ஊன்றிய—பெருமை என்பதைத் தாங்கும், தூண் ஐந்து—ஐந்து தூண்களாகும்.

கண்ணோட்டம்—கருணை, சால்பு—பற்பல குணங்களும் நிறைந்த தன்மை.

கருத்து:—குண நலம் கொண்டோரே சான்றோர்.

உ-கு:—குணக்குன்றாக ராமபிரான் விளங்கிய விவரம் கூறுக.

59. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு

உரை:—குற்றம் இலனாய் குடிசெய்து வாழ்வானை—குற்றம் ஒன்றும் செய்யாமல் தான் பிறந்த குலம் உயர நன்கு நடப்பவனை, சுற்றமா சுற்றும் உலகு—உறவினனாகக் கொள்ள உலகம் விரும்பி நிற்கும்.

குற்றம் புரியாதான் தான் பிறந்த குலத்தினுக்கும் உயர்வுதேடுவான் ஆதலின், அவனை அனைவரும் விரும்புவர்.

கருத்து:—குணவானை உறவாகக்கொள்ளும்குவலயம்.

உ-கு:—காந்தியின் பெருமையறிந்து பிற நாட்டினர் இந்தியரைக் 'காந்தி நாட்ட வர்' என்றும், இந்தியாவைக் 'காந்தி நாடு' என்றும் அழைப்பதால் உணர்க.

60. இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர், கரவாது
கைசெய்து ஊண் மாலை யவர்.

உரை:—கை-தமது கையால், செய்து உழுதல் செய்து, ஊண்—உண்ணுதலை, மாலையவர்—இயல்பாக உடைய வர், இரவார்—பிறரிடம் யாசியார்; இரப்பார்க்கு—தம்மை வந்து கேட்பார்க்கு, ஒன்று—அவர் வேண்டிய ஒன்றை, கரவாது—ஒளியாமல், ஈவார்—கொடுப்பர்.

இரவார்—யாசியார், இறவார்—சாகார், கரவாது—ஒளியாமல்; மாலை—இயல்பு. தம்கையால் உழுது உண்ணும் இயல்பினை உடையவர் பிறரிடம் போய் யாசியார், தம்மிடம் வந்து யாசிப்போருக்கு இல்லை என்னுமல் கொடுப்பர். இரத்தல் இழிந்தது, ஈதல் உயர்ந்தது.

கருத்து:—இரவாதுஈயும் தன்மை உழுவார்க்கேஉண்டு.

உ-கு:—சடையப்ப வள்ளல், சந்திரன் சுவர்க்கி என்போர் உழவுத் தொழிலினுலேயே உயர்வெல்லாம் எய்தினர்.

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர் - சென்னை 4 ஆகஸ்டு, 48

8712/4

திருக்குறள்

முதல் பாரம்		...	அணா	3
இரண்டாம்	,,	...	,,	3
மூன்றாம்	,,	...	,,	4
நான்காம்	,,	...	,,	5
ஐந்தாம்	,,	...	,,	6
ஆறாம் ஸ்டாண்டர்டு		....	,,	3
ஏழாம்	,,	....	,,	3
எட்டாம்	,,	....	,,	4

ஜயம் கம்பனியார்
புத்தக வியாபாரிகள்
நுங்கம்பாக்கம் -:- சென்னை 6